பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 08 வெள்ளிக்கிழமை 24.10.2025 கதிர் 348

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசியல்வாதிகள் விலாங்கு மீன்களைப் போன்று இரட்டைவேடதாரிகள் என்கிற குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே இருக்கின்றது. தமிழ் மக்களிடம் ☞ 2

# கல்விக்கு அதிகளவு நிதி ஒதுக்கும் வகையில் வருவாயை அதிகரிக்க வரிச்சீரமைப்பு தேவை

### மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சாரா சாதுன் வலியுறுத்து

2010ஆம் ஆண்டளவிலே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவீதமாகக் காணப்பட்ட கல்விக்கான செலவினங்கள், 2022ஆம் ஆண்டு 1.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் உறுப்பினரான சாரா சாதுன், தற்போது கல்வி உள்ளடங்கலாக இலங்கையர்களின் சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு செயற்திறன்மிக்க வழிமுறைகள் ஊடாக வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏதுவான வரி மறுசீரமைப்புக்களை ஆளும்தரப்பு மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் நீண்டகாலமாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் முறையற்ற வரிக்கொள்கைமற்றும்கல்வித்துறைக்கான குறைந்தளவு நிதி ஒதுக்கீட்டினால் பாடசாலைகள் முகங்கொடுத்துவரும் நெருக்கடிகள் தொடர்பில் விளக்கியும், அவற்றுக்கான தீர்வுப்பரிந்துரைகளைஉள்ளடக்கியும்'வரிச்சலுகைகளும் பாடசாலைகள்முகங்கொடுத்துள்ளநெருக்கடிகளும்'எனும் தலைப்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள 101 பக்க ஆய்வறிக்கை கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் மேற்படி ஆய்வறிக்கையைத் ☞ 3

# வடக்கு கிழக்கில் இந்தாண்டு 700 ஏக்கர் காணி விடுவிப்பாம்

இந்த ஆண்டு இதுவரை வடக்கு மற்றும் கிழக்கில் 700 ஏக்கருக்கும் அதிகமான நிலங்கள் பொதுமக்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜெயசேகர தெரிவித்தார்.

2025 ஜனவரி 01 முதல் இன்றுவரை, வடக்கில் மொத்தம் 672.24 ஏக்கர் காணிகள் பொதுமக்களிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிலங்களில் 86.24 ஏக்கர் தனியார் நிலங்களும், இராணுவத்தால் பயன்படுத்தப்பட்ட 586 ஏக்கர் அரச நிலங்களும் அடங்கும் என்று அவர் மேலும் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் மட்டும் 34.58 ஏக்கர் அரசு நிலம் விடுவிக்கப்பட்டுள்ளதாக ஜெயசேகர குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஈச்சங்குளம் நிலம் தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்பட்டு வருவதாகவும், விரைவில் தீர்க்கப்படும் என்றும் அவர் கூறினார்.


தேசிய பாதுகாப்புச் சபை (NSC) மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவிடம் தொடர்புடைய ☞ 2

# வடக்கு கிழக்கில் போதைப் பொருள் வழங்கலுக்கு இராணுவமே காரணம்

### கஜேந்திரகுமார் எம்.பி. நாடாளுமன்றில் குற்றச்சாட்டு

வடக்கு மற்றும் கிழக்கில் போதைப்பொருள் வழங்கலுக்கு இராணுவமே மூல காரணம் என்று குற்றஞ்சாட்டினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார்.

'விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சியைத் தோற்கடிப்பதற்காக இராணுவத்தினரால் வடக்கு, கிழக்கில் பரப்பப்பட்ட போதைப்பொருள் புற்றுநோய் இன்று தெற்கிலும் வியாபித்துள்ளது. போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமானால் இராணுவத்தினரை இது தொடர்பான நடவடிக்கையில் இருந்து



முற்று முழுதாக நீக்கி விடுங்கள்' என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ☞ 2

# வடக்குக்கான தொடருந்துகளில் இனி உறங்கல் வசதி கிடையாது

வடக்குக்கான தொடருந்துகளில் இனிமேல் உறங்கல் வசதி கொண்ட பெட்டிகளுக்கு இடமில்லை என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது இலங்கை தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2014 தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையில் தொடருந்து திணைக்களத்தின் மொத்த வருமானத்தில் 8 வீதமானவை வடக்கு. கிழக்கு தொடருந்து நிலையங்களின் ஊடாக்கக கிடைத்துள்ளன.

இதேவேளை வடக்கு மாகாண தொடருந்து நிலையங்களில்சிங்களமொழியில்14பேரும்,தமிழ் ☞ 2

# மழை குறையும்

நாட்டில் கடந்த ஒரு வாரமாக நிலவும் கனமழையுடனான வானிலை படிப்படியாக்கக குறைவடையும் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஒக்டோபர் 17 முதல் நேற்று (23) வரை கனமழையால் 13 மாவட்டங்களில் 2625 குடும்பங்களைச் சேர்ந்த 10,617 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய குருணாகல், அநுராதபுரம், காலி, கேகாலை, பதுளை, கண்டி, புத்தளம், கொழும்பு, நுவரெலியா, வவுனியா, மொனராகலை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலேயே ☞ 2

# நிதியியல் உறுதித் தன்மைசார் இலக்கு அடுத்த வருடத்திற்குள் அடையப்படும்

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

இலங்கையின் பணவீக்க மற்றும் நிதியியல் உறுதித்தன்மைசார்இலக்குகள்அடுத்தவருடத்துக்குள் அடையப்படும் எனவும், தற்போது பதிவாகியுள்ள மற்றும் எதிர்வுகூறப்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி வீதமானது ஆரோக்கியமானதும், நிலையானதுமான மட்டத்தில் காணப்படுவதாகவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் மேற்கொள்ளப்படும் நிதியியல் முறைமை மீளாய்வு தொடர்பில் தெளிவுபடுத்தும் நோக்கிலான செய்தியாளர் சந்திப்பு நேற்றுமு.ப 11.00 மணிக்கு கொழும்பிலுள்ள மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இதில் பொருளாதார வளர்ச்சி, பணவீக்க நிலவரம் மற்றும் எதிர்வுகூறல்கள் குறித்துப் பேசிய நந்தலால் வீரசிங்க மேலும் தெரிவித்ததாவது:

தற்போது அசாதாரண மட்டத்திலான பணச்சுருக்க நிலமை பதிவாகியிருக்கிறது. இருப்பினும் மத்திய வங்கியினால் இலக்கிடப்பட்டுள்ளவாறு அடுத்த ஆண்டு பணவீக்கத்தை 5 சதவீத மட்டத்துக்குக் கொண்டுவரமுடியும். 2022 மற்றும் 2023 ஆம் ☞ 2

# செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேச தொழில்நுட்ப ஒத்துழைப்பு

### பெறப்படும் என்கிறார் நீதி அமைச்சர்

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழிவிவகாரத்தில்சர்வதேசதொழில்நுட்ப ஒத்துழைப்பு பெறப்படும். ஏனெனில் உண்மையைக் கண்டறிவதற்கு அது ☞ 3

### வெற்றிடங்களை நிரப்புவதில் காட்டப்படும் தாமதத்தை எதிர்த்து

# யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஒக். 28 அடையாள வேலை நிறுத்தம்

### நிர்வாகம் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விசாரா பணியாளர் வெற்றிடங்களை நிரப்புவதில் காணப்படும் தாமத்தை எதிர்த்து ஒக்டோபர் 28 அன்று அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகயாழ்.பல்கலைக்கழகஊழியர்சங்கம்அறிவித்துள்ளது.

இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாமலுள்ளதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்தின் தவறுகளே காரணம் என்று குற்றஞ்சாட்டியுள்ள ஊழியர் சங்கம், உடனடியாக வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வாக்குக் கேட்கும்போது ஒரு மாதிரியாகவும் அதன்பின்னர் தெற்கு அரசதலைமைகளுடன் அதாவது ஆளும்தரப்புடன் ஒரு மாதிரியாகவும் நடந்துகொள்வார்கள் என்கிற குற்றச்சாட்டு அது.

இப்போது அத்தகைய குற்றச்சாட்டு தமிழ் அரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சிறீதரனை நோக்கி வெளிப்படையாகவே வந்திருக்கின்றது. சிறீதரன் தீவிர தமிழ்த் தேசியவாதம் பேசுகின்றவர். தமிழ் அரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மறுகணமே துயிலுமில்லத்தில் முதல் வணக்கம் வைத்தவர். மாவீரர்களின் கனவை நிறைவேற்றுவேன் என்று கள யதார்த்தத்திற்குச் சற்றும் சம்பந்தமில்லாமல் அறிக்கை விடுபவர். ஆனால் அவர் இன்று ஆளும்தரப்பிற்கு ஆதரவாகச் செயற்படும் ஒரு எதிர்கட்சிப் பிரதிநிதி என்கிற குற்றச்சாட்டுக்கு ஆளாகி இருக்கிறார்.

கரடியே காறித்துப்பிய தருணம் போன்று, ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத்தே சிறீதரனைப் பார்த்துக் குற்றச்சாட்டுகின்ற நிலமை வந்திருப்பதைப் பார்க்கும்போது தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை நினைத்து வேதனையாக இருக்கிறது.

அரசமைப்புச்சபையில் எதிர்க்கட்சி தவிர்ந்த ஏனைய சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக இருப்பவர் சிறீதரன். இந்தச் சபையில் ஆளும்தரப்பு மற்றும் முதன்மை எதிர்க் கட்சிக்கு நேரடியான பிரதிநித்துவங்கள் கிடைக்கின்றன. அதேபோன்று மக்கள் மத்தியிலிருந்து சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்ற வகையிலும் மக்களுக்கு நேரட்டிப் பிரதிநிதித்துவம் (பெயரளவில்) கிடைக்கின்றது. இவையெல்லாம்போக நாடாளுமன்றத்தில் ஆளும்தரப்பு, எதிர்த்தரப்பு தவிர்ந்த சிறிய கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதற்காக குறிப்பாக நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளுக்கான ஓர் இடம் வேண்டும் என்பதற்காக அரசமைப்புச் சபையில் ஓரிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ், முஸ்லிம் மக்களின் குரல்களும் கவனத்திலெடுக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒரு பிரதிநிதித்துவத்தின் மூலம் தமிழ் பேசும் மக்களின் தலைவிதியை மாற்றிவிட முடியாது எனினும், முக்கியமான தருணங்களில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக அரசமைப்புச் சபையின் அங்கீகாரத்துடன் ஆளும்தரப்புச் செயற்படுவதைத் தடுப்பதற்கும் மிக முக்கியமான தருணங்களில் தமிழ், முஸ்லிம் மக்களின் தேவைகளை விருப்பங்களை ஆளும்தரப்பு புறந்தள்ளாது இருக்கவேண்டிய தேவைப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக இந்த ஏற்பாடு அரசமைப்புச் சபையில் செய்யப்பட்டிருக்கின்றது.

இப்போது அரசமைப்புச் சபையில் இந்தப் பிரதிநிதியாக சிறீதரனே இருக்கின்றார். நாடாளுமன்றத்தில் இந்தப் பிரதிநிதித்துவத்திற்காக ஜீவன் தொண்டமானுடன் போட்டியிட்டு ஒரு வாக்கு வித்தியாசத்தில் அவர் வெற்றிபெற்று அரசமைப்புச் சபையின் உறுப்பினரானார். நாடாளுமன்றத்தில் ஆளும்தரப்பு மற்றும் முதன்மை எதிர்த்தரப்புத் தவிர்த்து உள்ள 24 நாடாளுமன்ற உறுப்பினர்களின் சார்பில் ஜீவனுக்கு 10 வாக்குகளும் சிறீதரனுக்குப் 11 வாக்குகளும் கிடைத்தன. இப்படி சிறுபான்மைத் தரப்பின் சார்பிலும் எதிர்த் தரப்பின் சார்பிலும் அரசமைப்புச் சபையின் உறுப்பினரான சிறீதரன் அந்தச் சபையில் ஆளும்தரப்பின் செயற்பாடுகளுக்கு ஆதரவாகவே செயற்படுகின்றார் என்பதே இப்போது எழுந்துள்ள குற்றச்சாட்டு. ஆளும்தரப்பு முன்னெடுக்கும் சில விடயங்கள் தொடர்பில் எதிர்க் கட்சிகளின் பொது நிலைப்பாட்டுக்கு எதிராக சிறீதரன் ஆளும்தரப்பை ஆதரித்துள்ளார் என்பதே இந்தக் குற்றச்சாட்டுக்குக் காரணம். இதனால் அவரை மாற்றிவிட்டு மீண்டும் ஒரு தெரிவு நடத்தி சிறு கட்சிகளின் பிரதிநிதியாக வேறொருவரைத் தெரிவு செய்வதற்கு வழியேற்படுத்தப்படவேண்டும் என்று சாமர சம்பத் சபாநாயகரிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

தற்போதைய சூழ்நிலையில், அதுவும் ஆளும்தரப்புக்கு ஆதரவாகச் சிறீதரன் செயற்படுகின்றார் என்கிற நிலையில் அவரை மாற்றும் வகையில் ஆளும்தரப்பு மீண்டும் ஒரு தெரிவை நடத்தப்போவதில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. ஆனால், இரண்டு சந்தர்ப்பங்களில் ஆளும்தரப்பின் நிலைப்பாட்டோடு ஒத்து சிறீதரன் எடுத்த முடிவுகள் தமிழ் மக்களின் அரசியலிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை என்பதுதான் தமிழ் மக்களின் முன்னுள்ள சிக்கல். லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளராக ஆளும்தரப்பு விரும்பிய ஒரு நீதிபதியை நியமிப்பதற்கு (இதில் நியமன நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளன என்கிற குற்றச்சாட்டும் உண்டு) சிறீதரன் ஆதரவு வழங்கியுள்ளார். இந்தப் பணிப்பாளர் ஆளும்தரப்புக்கு எதிரான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதிலும் பார்க்க எதிர்க் கட்சிகள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதிலேயே அக்கறையாக இருக்கிறார், அவர் அரசியல் பின்புல நோக்கத்தோடு செயற்படுகின்றார் என்கிற கடுமையான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

காணாமலாக்கப்பட்டோருக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கான அலுவலகத்தின் உறுப்பினர்களை நியமிப்பதற்கான விடயத்திலும் முன்னாள் படைத்துறை அதிகாரிகளை நியமனம் செய்வதற்கும் ஆளும்தரப்புக்கு ஆதரவாக சிறீதரன் நடந்துகொண்டுள்ளார் என்பது இரண்டாவது விடயம். இந்த இரு விடயங்களுமே எதிர்காலத்தில் தமிழ் அரசியலில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. அப்படியிருந்தும் தான் ஏன் இந்த விடயங்களில் ஆளும்தரப்பை ஆதரித்தார் என்பதை சிறீதரன் வெளிப்படுத்தவில்லை. அவர் செய்ததில் ஏதாவது நியாயங்கள் இருந்தால் அவர் தனது முடிவைப் பகிரங்கப்படுத்து அதற்கான காரணங்களையும் மக்களிடம் தொடக்கத்திலேயே விளக்கியிருக்கவேண்டும். அதுவல்லாமல் இந்த விவகாரங்கள் தமிழர் அரசியலைப் பாதிக்கும் என்கிற உணர்திறனற்று அவர் தனது முடிவுகளை எடுத்திருந்தால் விதியே என்று நொந்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழிப்பதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் மற்றும் சட்டரீதியான கட்டமைப்பை வலுப்படுத்துதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2001ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரையில் நான் இந்த நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தேன். அந்தக் காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அப்போதைய ஆளும்தரப்பிற்கும் இடையே சமாதான முயற்சி இடம்பெற்றது. போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது. ஆனால் 2006ஆம் ஆண்டில் ஆளும்தரப்பு ஒருதலைப்பட்சமாக அதிலிருந்து விலகி இனப் படுகொலையை நோக்கி போர் நடத்திச் செல்லப்பட்டது.

அந்தக்காலப்பகுதியில் நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வேளையில் எனக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும், அவர்களின் நிர்வாகத்துடனும் பழகக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்திருந்தன. அந்தக் காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் விடுதலைப் புலிகள் நிர்வாக கட்டுப்பாட்டு பகுதியில் போதைப் பொருள் பாவனை பூச்சியமாகவே இருந்தது. அந்தளவு தூரத்திற்கு அந்த நிர்வாகம் தமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மக்களை பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும் என்ற இலக்கில் இயங்கியமையினால் அவர்கள் போதைப் பொருளை ஒழிக்கும் நடவடிக்கையில் சாதித்தனர்.

இதேவேளை வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் அரச கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களிலும் போதைப் பொருள் பாவனை மிகவும் குறைந்தளவிலேயே இருந்தது. விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் அங்கேயும் இருந்தமையினால் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்குப் பயம் இருந்தது. அந்தளவு தூரத்திற்கு மக்கள் மீது விருப்பமும் பாசமும் கொண்ட நிர்வாகம் இருக்கும்போதுதான் இவ்வாறான மோசமான, சமூகத்தில் புற்றுநோயாக கருதப்படும் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும்.

ஆனால் இன்று வடக்கு மற்றும் கிழக்கில் போதைப் பொருளை பரப்புவதில் இராணுவத்திற்கு மிகப்பெரிய பங்கு உள்ளது. போர் முடிவடைந்த பின்னர் 2015ஆம் ஆண்டில் மைத்திரிபால சிறிசேன தலைமையில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டபோது, இராணுவம் போதைப்பொருளை முற்றுமுழுதாக ஒழிப்பதை விரும்பவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

1995 ஆண்டில் இருந்து இராணுவ கட்டுப்பாட்டுக்குள் யாழ்ப்பாணம் சென்ற பின்னரே போதைப் பொருள் பிரச்சினை அங்கே வளரத் தொடங்கியது. அதுவும் 2009ஆம் ஆண்டிற்கு பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணம் போதைப் பொருளால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு மாகாணம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்போது போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் சமூகத்தால் அடையாளப்படுத்தப்பட்டு அவர்களைத் துரத்திச் செல்லும்போது, அவர்கள் ஓடி ஒளியும் இடம் இராணுவ முகாம்களே ஆகும். பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடுகளை செய்தால் அவ்வாறான முறைப்பாடுகளை பதிவு செய்ய மறுக்கின்றனர். இதுவே உண்மை. மக்கள் மீது பற்றுக்கொண்ட நிர்வாகம் மற்றும் ஆளும்தரப்பு இருந்தால் மட்டுமே இவ்வாறான மோசமான செயற்பாடுகளைத் தடுக்கலாம்.

முதல்கட்டமாக இராணுவத்தைப் பயன்படுத்தி போதைப் பொருளை பரப்பி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சியை தோற்கடிப்பதற்காக தொடங்கப்பட்ட ஒரு புற்றுநோய் இப்போது தெற்கிற்கும் பரவியுள்ளது. தெற்கில் பரவியுள்ள நிலமையை ஆராய்ந்து இராணுவத்தின் தொடர்புகளை தேடிபாருங்கள். அவர்கள் ஊடாகவே இது பரவுகின்றது. இதுவே உண்மை.

மக்களின் பாதுகாப்பு மற்றும் மக்கள் நலன் தொடர்பான அதிகாரங்கள் குறிப்பாக பொலிஸ் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்றவை அடிப்படைத் தேவைப்பாடுகள் அந்தந்தந்த மக்களிடமே விடப்படவேண்டும். அப்போதே அதில் ஈடுபடுகின்றவர்களுக்கு அதில் பொறுப்புக் கூறும் நிலைமை ஏற்படும். ஆனால் சம்பந்தம் இல்லாதவர்கள், 30 வருடங்களாக வடக்கு, கிழக்கு மக்களை பலவீனப் படுத்துவதற்காக செயற்பட்ட கட்டமைப்புகள் இப்போது நிர்வாகம் செய்யும் போது அங்குள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

கல்வியை எடுத்துப்பாருங்கள் போர் நடக்கும்போதும், வடக்கு மாகாணம், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்ற இடங்களிலேயே இருந்தது. ஆனால் 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் 8, 9ஆம் இடத்தில் இருக்கின்றோம். இது ஏன்? போர் நடக்கும்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு இருந்ததாலேயே ஏதேவொரு வகையில் மிகவும் கஸ்டமான நேரத்தில்கூட அந்தப் பிள்ளைகள் படிக்கக்கூடிய சூழல் இருந்தது. ஆனால் இப்போது திட்டமிடப்பட்ட போதைப்பொருள்களால் மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்த நிலைமை இப்போது தெற்கிற்கும் பரவுகின்றது.

இந்நிலையில் போதைப்பொருளுக்கு எதிராக ஆளும்தரப்பு முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு எங்களின் முழு ஆதரவு இருக்கும். தயவு செய்து போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமாயின் இராணுவத்தினரை இது தொடர்பான நடவடிக்கையில் இருந்து முற்று முழுதாக நீக்கிவிடுங்கள். வடக்கு, கிழக்கில் போதைப்பொருள் பாவனைக்கு அவர்களே மூல காரணம். நீங்கள் உங்களின் திட்டங்கள் தொடர்பில் வெள்ளை அறிக்கையை வெளியிட்டு, இந்த திட்டம் தொடர்பில் நிபுணத்துவம் பெற்றவர்களின் கருத்துகளை அறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

## வடக்குக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொழியில் 68 பேரும் தொடருந்து நிலைய பொறுப்பதிகாரிகளாகப் பணியாற்றுகின்றனர். இவர்கள் தவிர மற்றைய அதிகாரிகளில் சிங்கள மொழியில் 52 பேரும், தமிழ் மொழியில் 64 பேரும் பணியாற்றுகின்றனர்.

அத்துடன் வடக்கில் 23 பிரதான தொடருந்து நிலையங்கள் அடங்கலாக மொத்தமாக 41 தொடருந்து நிலையங்கள் இருக்கின்றன. இவற்றில் வவுனியாவில் இருந்து காங்கேசன்துறை வரையில் 16 பிரதான தொடருந்து நிலையங்களும் 13 உப தொடருந்து நிலையங்களும் உள்ளன.

மதவாச்சியில் இருந்து தலைமன்னார் வரையில் 7 பிரதான தொடருந்து நிலையங்களும் 4 உப தொடருந்து நிலையங்களும் உள்ளன.

இதேவேளை வடக்குக்கான தொடருந்துகளில் உறங்கும் பெட்டிகள் எவையும் இதுவரையில் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை. கொழும்பு - யாழ்ப்பாணம் மார்க்கத்தில் புதிய தொடருந்துப் பெட்டிகளே இணைக்கப்பட்டுள்ளதால் பழைய உறங்கும் பெட்டி சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. அதற்குப் பதிலாக குளிரூட்டப்பட்ட பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன.

பழைய முதலாம் வகுப்பு உறங்கும் பெட்டியில் 12 பயணிகளே பயணிக்க முடியும். ஆனால் புதிய குளிரூட்டப்பட்ட தொடருந்துப் பெட்டிகளில் 48 பயணிகள் பயணிக்க முடியும். இதனால் புதிதாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள தொடருந்து பெட்டிகளில் உறங்கும் பெட்டிகள் அடங்கவில்லை - என்றார்.

இதன்போது மேலதிக கேள்விகளை எழுப்பிய சிறீதரன், இனிவரும் நாட்களிலாவது தொடருந்துங்களில் முதலாம் வகுப்பு உறங்கும் பெட்டிகள் இணைக்கப்படுமா? அதற்கான வாய்ப்புகள் உள்ளனவா? என்று கேட்டார்.

இதற்கு பதிலளித்த பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன, உறங்கும் பெட்டிகளை இணைத்தால் அதில் குறைந்தளவான பயணிகளே பயணிக்க முடியும். அதில் 12 பயணிகளுக்கே பயணிக்க முடியுமாக இருக்கும். ஆனால் குளிரூட்டப்பட்ட சொகுசு பெட்டிகளில் 48 பேர் வரையிலான பயணிகள் பயணிக்க முடியும். இதனால் உறங்கும் பெட்டிகளை இறக்குமதி செய்ய எதிர்பார்க்கவில்லை. அதற்கு பதிலாக மாற்றியமைக்கக்கூடிய வசதியான சொகுசு ஆசனங்களைக் கொண்ட தொடருந்து பெட்டிகளையே பயன்படுத்த எதிர்பார்க்கின்றோம் என்றார்.

## வடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் அளிக்கப்பட்ட பின்னர் குறிப்பிடப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் ஜெயசேகர தெரிவித்தார்.

இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது பாதுகாப்புத் துணை அமைச்சர் இந்த விவரத்தை வழங்கினார்.

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றால் தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தி அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் விரிவுபடுத்துவோம் என்றும் எச்சரித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விசாரா பணியாளர்களுக்கான 355 வெற்றிடங்கள் காணப்படுகின்றபோதும் அவற்றில் 7 வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி தாம் முன்வைத்த ஆளணி வெற்றிட நிரப்பல் கோரிக்கை பிரதமர் அலுவலகத்தில் பதிலுக்காகக் காத்துக் கிடப்பதாகவும், அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்றால் ஊழியர் சங்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கும் நிலை இருக்கின்றது என்று சுட்டிக்காட்டியும் அண்மையில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் அரசுத் தலைவர் அநுரகுமாரவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தது. ஆனால், பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி பெறுவதில் சிறு நிர்வாகத் தவறு ஏற்பட்டுள்ளது எனவும், திட்டமிட்ட பின்னடிப்புச் செய்யப்பட்டுள்ளது எனவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் ஊடகச்செய்தியினூடாக கூறுகின்றபோதிலும் இங்கு உண்மையான நிலைமை வேறு என்று ஊழியர் சங்கம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள 17 பல்கலைக் கழகங்களிலும் காணப்படும் போதனை சாரா ஊழியர்களுக்கான வெற்றிடங்களில் 1400 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குவது எனும் ஆளும்தரப்புத் தீர்மானத்திற்கமைய அனைத்துப் பல்கலைக் கழகங்களாலும் வழங்கப்பட்ட கோரிக்கையின்படி காணப்படும் வெற்றிடங்களில் 67 வீத வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டு பெரும்பாலான பல்கலைக்கழகங்களினால் அவற்றிற்கான ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை பத்திரிகை விளம்பரங்கள் மூலம் அனைவரும் அறியமுடியும். ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் 355 பதவி வெற்றிடங்களில் 67 வீதமான 237 இற்கும் அதிகமான வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியில் ஆக 7 வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள அறிக்கை, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கோரிக்கைக்கடிதங்களில்

தொடர்ச்சி 3ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படும் தவறுகளை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவுடனான கலந்துரையாடல்களில் (20.03.2025, 30.09.2025) தெளிவுபடுத்தி இருந்த போதிலும் அதில் பல்கலைகழக மானியங்கள் ஆணைக் குழு அக்கறை செலுத்தாது பல்கலைக்கழகத்தின் தவறை அவர்களே சீர் செய்ய வேண்டும் எனக் கூறி இன்று அதற்கான அனுமதி கிடைக்கப்பெறாததற்கு அவர்களும் பொறுப்பானவர்கள் ஆவார்கள். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 355 வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தனது கோரிக்கைகடிதத்தில்வெறும்117வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அனுமதி கேட்டுள்ளது. இது தவறெனநாங்கள்பலதடவைசுட்டிக்காட்டியும் இன்று வரை மாற்றப்படவில்லை. இதற்கான காரணம் வேலையாள்கள் தரம் மற்றும் பொறியியல் சேவைகளில் காணப்படும் தரங்களுக்கான வெற்றிடங்கள் முறையற்ற விதத்தில் தனியார் நிறுவனங்களின் ஊடாக நிரப்பப்படுகின்றன. இது தற்காலிகமானது என பதிவாளர் கூறியிருந்த போதிலும் எதற்காக அனுமதிக் கடிதத்தில் அவ்வெற்றிடங்கள் வெளிப்படுத்தப்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது என்பது எமக்கு இன்னும் பலவித ஐயத்தை ஏற்படுத்தியிருந்தது. கோரிக்கை கடிதத்தில் தவறுமட்டுமல்லாதுகடிதம்அனுப்புவதிலும்பல நிர்வாக தவறுகளை எமது பல்கலைக்கழகம் வேண்டுமென்றே ஏற்படுத்தியதாகவே நாம் கருத வேண்டியுள்ளது. ஏனெனில் கல்வி சார் ஊழியர்களுக்கான அனுமதி கடிதம் சரியான முறையில் சென்று சேர்ந்துள்ளது. அதற்கான ஒரு தொகுதி அனுமதியும் கிடைக்க பெற்றுள்ளது. எனவே பதிவாளர், துணைவேந்தர் ஆகியோரின் அசமந்த செயற்பாடு இன்று எம்மை தொழிற்சங்கப் போராட்டத்தை ஏற்படுத்தத் தூண்டி உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

## செம்மணிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியம் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான விசாரணைக்கு சர்வதேச ஒத்துழைப்பு பெறப்படவேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்தார்

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைக்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எமக்கு சில விடயங்களில் ஆய்வுகூட வசதி இல்லை. எமது நாட்டு பணியாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்படவேண்டும். எமக்கு உண்மையை கண்டறிவதுதான் முக்கியம். தொழில்நுட்ப உதவியும் தேவைப்படுகின்றது. எனவே, சர்வதேச தொழில்நுட்ப உதவி பெறப்படும் என்றார் அமைச்சர்.

## கல்விக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாரித்த மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் மூத்த ஆய்வாளரும், வறுமை மற்றும் சமத்துவமின்மை தொடர்பான செயற்பாட்டாளருமான சாரா சாதுன் இலங்கையின் வரிக்கட்டமைப்பு தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

2019இல் ஆளும்தரப்பின் மூத்த அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட மட்டுமீறிய அளவிலான வரிச்சலுகை வழங்கல் தீர்மானமானது அதன் நீட்சியான தொடர் விளைவுகளால் 2022இல் தீவிர பொருளாதார நெருக்கடிக்கு வழிகோலியதாக 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முன்னெப்போதுமில்லாத வகையிலான தீர்ப்பை உயர்நீதிமன்றம் வழங்கியது.

பொருளாதார நெருக்கடியை அடுத்து கடன்களை மீளச்செலுத்துவதற்கான ஆற்றலை ஆளும்தரப்பு இழந்தமையானது குறிப்பாக உணவுப்பொருட்களின் விலைகள் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களின் வலுவான அதிகரிப்புக்கும், தற்போதுவரை தொடரும் தாக்கங்களான வேலைவாய்ப்பு இழப்பு மற்றும் சம்பளக் குறைப்பு போன்ற தாக்கங்களுக்கும் வழிவகுத்தது.

அதனையடுத்து வலுப்பெற்ற போராட்டங்களால் கோட்டாபய ராஜபக்ச ஆளும்தரப்பு ஆட்சிபீடத்திலிருந்து துரத்தப்பட்டதுடன், அதனைத்தொடர்ந்து நடைபெற்ற தேர்தல்கள் மூலம் அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையிலான புதிய ஆளும்தரப்பு தெரிவுசெய்யப்பட்டது. அத்தெரிவானது புதிய பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவதில் இலங்கையர்கள் தெளிவாக இருப்பதைக் காண்பித்தது. அதனை முன்னிறுத்தி ஆளும்தரப்பு சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதிலும், தற்போதைய மறுசீரமைப்புக்கள் இந்நெருக்கடியின் ஆணிவேரைக் களைவதற்குப் போதுமானவையன்று.

உயர்நீதிமன்றமானது இந்நெருக்கடிக்கு வழிகோலிய உடனடிக் காரணத்தில் கவனம் செலுத்தியிருந்தது. இருப்பினும் இப்பிரச்சினைக்கான அடிப்படை பல தசாப்தங்களுக்கு முன்னரே உருவாகியிருப்பதை நாம் கண்டறிந்துள்ளோம். 1970களின் பிற்பகுதியில் இலங்கை ஒரு பொருளாதார நிலைமாற்றத்தை நோக்கி நகர்ந்தது. பெருநிறுவனங்களுக்கும் தனவந்தர்களுக்கும் சாதகமாக அமைந்த, குறைந்தளவு வருமானத்தையே ஈட்டித்தந்த வரிக்கொள்கைகளும் அதில் உள்ளடங்குகின்றன.

இவை 2022இல் தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடிக்கு வித்திட்டதுடன் மாத்திரமன்றி, மனித உரிமைகளுக்காக ஆளுமதரப்பினால்மேற்கொள்ளப்படவேண்டிய செலவினங்களில் நிலவும் பெரும் பின்னடைவுக்கும் காரணமாக அமைந்தன. குறிப்பாக 2010ஆம் ஆண்டளவிலே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவீதமாகக் காணப்பட்ட கல்விக்கான செலவினங்கள், 2022ஆம் ஆண்டு 1.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

இவ்வீழ்ச்சியானது முன்னொரு காலத்தில் கல்வித்துறையில் உலக நாடுகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்த இலங்கை போன்றதொரு நாட்டுக்குப் பெரும் பின்னடைவாகும். தமதுமக்களுக்கான இலவச தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வியை அறிமுகப்படுத்திய சில முதன்மை நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். சுதந்திரத்தின் பின்னர் அரச நிதி மூலம் வழங்கப்பட்ட கல்வியானது எழுத்தறிவு வீத உயர்வுக்கும், சமூக மற்றும் பொருளாதார இயங்குகைக்கும், சமத்துவமின்மை வீழ்ச்சிக்கும் பெரிதும் உதவியது.

1960-1970க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அரச வருமானத்தில் 90 சதவீதமானவை வரிகள் மூலம் திரட்டப்பட்டதுடன் அவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 - 25 சதவீதமாகக் காணப்பட்டன. இது 3 - 5 சதவீத நிதி கல்வித்துறைக்கு செலவிடப்படுவதற்குப் பெரிதும் உதவியது.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது கல்வி உள்ளடங்கலாக இலங்கையர்களின் சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு செயற்திறன்மிக்க வழிமுறைகள் ஊடாக வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏதுவான வரி மறுசீரமைப்புக்களை ஆளும்தரப்பு மேற்கொள்ளவேண்டும். இது மனித உரிமைகளைமையப்படுத்திய பொருளாதாரக் கட்டமைப்பைக் கட்டியெழுப்பவேண்டிய தருணமாகும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கல்விக்கான ஒதுக்கீடுகள் – உரிமையின் வியர்வையா, வஞ்சமா?

கல்வி என்பது மனிதனின் வாழ்வை உயர்த்தும் நம்பிக்கையின் விதை. அது ஒரே நேரத்தில் வளர்ச்சிப் பாதையையும், அடிப்படை மனித உரிமையும் குறிக்கிறது. ஆனால் இலங்கையில் இன்று அந்த உரிமை நிதி பற்றாக்குறையால் நழுவி வருகிறது. கல்விக்கான அரசின் ஒதுக்கீடு சுருங்கி, அதனுடன் சேர்ந்து பிள்ளைகளின் கனவுகளும் சுருங்கி வருகின்றன. அதிலும் கல்விச் சீர்திருத்தம் பற்றிப் பேசப்படும் இன்றைய காலத்தில் இது மிகவும் கவனம் செலுத்தப்படவேண்டிய விடயமாகின்றது.

### மனித உரிமைகள் கண்காணிப்பக அறிக்கை

மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch - HRW) சமீபத்தில் வெளியிட்ட 'டக்ஸ் கிவ்ஸ் வேய்ஸ், ஸ்ரகிளிங் ஸ்கூல்ஸ்' (Tax Giveaways, Struggling Schools) என்ற வரிச் சலுகைகளால் சிக்கல்படும் பாடசாலைகள் என்ற அறிக்கை, இலங்கையின் கல்வி நிதி நிலைமையைப் பற்றிய கடுமையான எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

1970களில் அரசு வருவாய் உள்நாட்டு மொத்த உற்பத்தியின் (GDP) 20% அளவில் இருந்தது. ஆனால் இன்று அது 7.4% மட்டுமே. கல்விக்கான அரசு ஒதுக்கீடு தற்போது மொத்த உற்பத்தியின் 1.5%க்கு கீழே இது உலகில் மிகவும் குறைந்த அளவுகளில் ஒன்றாகும்.

இத்தகைய குறைவு வெறும் புள்ளிவிவரமல்ல. அது ஒரு தலைமுறையின் எதிர்காலத்தைத் துளைத்துப் போகும் வலியாகும். கல்விக்கான ஒதுக்கீடு குறையும்போது, அதன் தாக்கம் நேரடியாக பாடசாலைகளின் அடிப்படை வசதிகளிலும் ஆசிரியர்களின் பற்றாக்குறையிலும் அவர்களின் திறன்களிலும் வெளிப்படுகின்றது.

இலங்கையின் பெருமை – 'இலவச கல்வி'. ஆனால் இன்று அது பெயரிலேயே இலவசம்.

பல அரசு பள்ளிகள் 'கட்டாய நன்கொடை', 'பரீட்சை கட்டணம்', 'புது கட்டடப் பங்களிப்பு' 'பாடசாலைகளின் பராமரிப்பு' எனும் பெயர்களில் பெற்றோர்களிடம் பணம் கேட்கின்றன.

மாணவர்களின் புத்தகங்களுக்காக, வகுப்பறையைப் பழுது பார்க்க, வண்ணம் பூச, ஆசிரியர்களை நியமிக்க – எதற்கும் பெற்றோரின் கையில்தான் சுமை விழுகிறது.

இதனுடன் இணைந்துள்ளது தனியார் கல்வி நிறுவன கலாசாரம் மேலும் சுமையை அதிகரிக்கின்றது. பாடசாலையில் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களுக்கேகூட கூடுதல் வகுப்புகள் கட்டாயமாகி விட்டன. இதனால் கல்வி ஒரு உரிமையாக இல்லாமல், பணம் உள்ளவர்களுக்கான 'வாய்ப்புப் பொருள்' என்றாகி விட்டது.

### வறுமைச் சூழலில் கல்வியின் வீழ்ச்சி

மனித உரிமைகள் கண்காணிப்பக அறிக்கையில் குறிப்பிடப்படும் ஓர் உண்மை இதை மேலும் வலுப்படுத்துகிறது. ஒரு தேயிலைத் தொழிலாளியின் குடும்பம் மாதம் ரூ.500க்கூட குழந்தையின் கல்விக்குச் செலவிட முடியாமல் தவிக்கிறது. இதுவே நிதி ஒதுக்கீட்டின் குறைபாடு எவ்வளவு கடுமையாக சமூகத்தின் அடித்தட்டு மக்களைத் தாக்குகிறது என்பதற்கான சான்று.

இங்கே கல்வி ஒரு 'படிப்பதற்கான வாய்ப்பு' அல்ல – 'படிக்க முடியாத நிலை'யாக மாறிவிட்டது.

### வளர்ச்சிக்கு நேர்மையான வரி அவசியம்

'வளர்ச்சி மட்டுமே மனித உரிமைகளை நிறைவேற்றுவதற்கு போதாது. அரசு ஒரு நியாயமான வரி அமைப்பை உருவாக்கி, அதிலிருந்து கிடைக்கும் வருவாயை கல்வி மற்றும் பொது சேவைகளுக்கு சரியாக ஒதுக்க வேண்டும்' என்கிறார் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையின் இணைஆராய்ச்சியாளர் சாரா சாதூன்.

அவரது கருத்து நம்மை சிந்திக்க வைக்கிறது. 'பொருளாதார வளர்ச்சி' என்பது எண்களில் காணப்படும் வளர்ச்சி; ஆனால் 'மனித வளர்ச்சி' என்பது சமமான வாய்ப்பில் காணப்படும் வளர்ச்சி. கல்வி அந்த வாய்ப்பின் அடிப்படை. எனவே நிதி ஒதுக்கீடு குறையும்போது, அது வளர்ச்சியையே பின்வாங்கச் செய்கிறது.

சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையில், ஒரு நாடு கல்விக்காக குறைந்தது தனது உள்நாட்டு உற்பத்தியின் 4 முதல் 6 % வரை செலவிட வேண்டும். ஆனால் இலங்கை அதற்குப் பாதியளவுகூட ஒதுக்கவில்லை.

இந்த நிலை நீடித்தால், கல்வி என்பது உரிமை என்ற எண்ணம் அழிந்து, அது பணக்காரர்களின் சொத்தாக மாறிவிடும் அபாயம் மிகுந்துள்ளது.

ஆளும்தரப்பு பல கோடி ரூபாய்களை பெரும் நிறுவனங்களுக்கு வரிவிலக்காக அளிக்கிறது. ஆனால் அதே அரசு ஒரு கிராமப் பாடசாலைக்கு ஒரு கட்டடம், ஒரு கழிவறை, அல்லது ஒரு அறிவியல் ஆய்வுக்கூடம் அமைக்க நிதி தரவில்லை. இதுவே மனித உரிமை மீறலின் பொருளாதார வடிவம்.

### கல்வி - உரிமையா, கடமையா?

இலங்கை ஒருகாலத்தில் 'தெற்காசியாவின் கல்வி மையம்' என்று போற்றப்பட்டது. இன்று அதே நாடு கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் அடித்தளத்துக்கே சரிந்துள்ளது.

இதை மாற்றுவது ஒரு கொள்கை மாற்றம் மட்டுமல்ல – அது நீதிசார் மாற்றம்.

அரசு கல்வியைச் செலவாக அல்ல, மனித முதலீடாக காண வேண்டிய நேரம் இது.

வரிவிலக்குகளில் கருணை காட்டுவதற்கு பதிலாக, கல்வியில் கருணை காட்டட்டும். ஏனெனில் கல்வி என்பது ஒரு அரசின் கடமை மட்டுமல்ல – ஒரு தேசத்தின் மரியாதை, ஒரு மக்களின் உயிர்நாடி.

முன்னாள் தளபதி சரத் பொன்சேகா கூறிய

## வெள்ளைக் கொடிக் கொலைகள் குறித்து விசாரணை நடத்தி தண்டனை வழங்குக

### தமிழ் அரசு எம்.பி. கோடீஸ்வரன் நாடாளுமன்றில் கோரிக்கை

2009இல் இறுதிக்கட்டப்போரின்போது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த பொதுமக்களும், விடுதலைப் புலிகளும், இராணுவ அதிகாரியான சவேந்திர சில்வாவின் அனுமதியுடனேயே சுட்டுக்கொலை செய்யப்பட்டார்கள் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். முறையான விசாரணை செய்து அதனுடன் தொடர்புடைய அனைவரும் தண்டிக்கப்படவேண்டும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் கோரிக்கை முன்வைத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ஒழிப்பதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் மற்றும் சட்டரீதியான கட்டமைப்பை வலுப்படுத்துதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஒரு விடயத்தை கூறியிருந்தார். அதாவது 2009இல் இறுதி போரின்போது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த பொதுமக்கள், விடுதலைப் புலிகள், இராணுவ அதிகாரி சவேந்திர சில்வாவின் அனுமதியுடன் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். அதனுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் மற்றும் அப்போதிருந்த பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ச ஆகியோர் இந்தக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

போர் முடிவடைந்த பின்னர் 2009இல் இருந்து இன்னும் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. இந்த நாட்டின் இராணுவத் தளபதியாக இருந்தவரே சரணடைந்த தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறியிருக்கின்றார். அவர்களுக்கான விசாரணைகளை கடந்த ஆளும்தரப்பும் செய்யவில்லை, இந்த ஆளும்தரப்பும் செய்யவில்லை.

இதனாலேயே தமிழ் மக்கள் உள்நாட்டுப் பொறிமுறையில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றனர். இதன் காரணமாகவே நாங்கள் சர்வதேச விசாரணையைக் கோருகின்றோம். இந்த சர்வதேச விசாரணைகளின் மூலமே இதனுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிகள், அரசியல்வாதிகளைத் தண்டிக்கமுடியும். உள்நாட்டுப் பொறிமுறை ஊடாக இவர்களைத் தண்டிக்க முடியாது. இதனாலேயே சர்வதேச விசாரணையை கோர வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறுக் குண்டுத் தாக்குதல்களில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வோம் என்று இந்த ஆளும்தரப்பு கடந்த காலங்களில் கூறினாலும் இன்று வரையில் மக்களின் இழப்புக்கு நியாயம் கிடைக்கவில்லை. ஏனென்றால் இதில் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகள், அரசியல்வாதிகள் இருக்கின்றனர். அவர்களைத் தண்டித்தால் இந்த நாடு பிரளயமடையும் என்ற பயம் ஆளும்தரப்பிற்கு இருக்கின்றது. ஆளும்தரப்பு சரியான குற்றவாளிகளை தண்டிக்க வேண்டுமென்றால் அது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். இல்லாவிட்டால் கடந்த கால ஆளும்தரப்புக்களைப் போன்றே இந்த ஆளும்தரப்பையும் கருதுவோம் - என்றார்.

## 'மகே சேர் ராஜபக்ச' என பெக்கோ சமனின் தொலைபேசியில் நாமலின் பெயர் உள்ளது

### தொழில் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

'நாமல் சேர்', 'மகே சேர் ராஜபக்ச' என்று பெகோ சமனின் தொலைபேசியில் உள்ளது. அது நாமல் ராஜபக்சவா அல்லது வேறு நாமலா, என்பது எமக்குத் தெரியாது. ஆகவே அச்சமடைய வேண்டாம். உண்மை வெளிவரும் என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ஒழிப்பதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் மற்றும் சட்டரீதியான கட்டமைப்பை வலுப்படுத்துதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் உற்பத்தி மாவட்டமாக அம்பாந்தோட்டையை எதிர்தரப்பினர் மாற்றியமைத்துள்ளார்கள். போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகளை இடைநிறுத்தப் போவதில்லை. இலகுப்படுத்தப் போவதுமில்லை.

எதிர்கட்சியின் உறுப்பினர் ஆடை அணிந்துக்கொண்டா போதைப்பொருள் மற்றும் பாதாளக்; குழுக்களுக்கு எதிராக பேசுகிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. ஐ.ஆர்.சி. ஆவணப்படுத்தலில் 1305/2015 கீழ் 'பி' தரத்தில் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிக்காகவே எதிர்க்கட்சியினர் இன்று முன்னிலையாகுகிறார்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் 35 பிரதேசசபைத்தலைவர்கள் உள்ளார்கள். கொலை செய்யப்பட்டவரைத் தவிர்த்து மிகுதி 34 பேருக்கு எவ்வித அச்சுறுத்தலும், பாதிப்பும் ஏற்படவில்லை.

மாகந்துரே மதூஸ் வெளிப்படுத்திய உண்மைகள் அவருடன் புதைக்கப்பட்டன. மைத்திரி, ரணில், சஜித் ஆகியோர் அன்று அரசியல் குற்றவாளிகளை பாதுகாத்தார்கள். அதேபோல் கோட்டபய ராஜபக்ச மற்றும் ரணில் - ராஜபக்சக்கள் குற்றவாளிகளைப் பாதுகாத்தார்கள்.

நாமல் ராஜபக்சவின் சகாவான தங்காலை பிரதேச சபைத் தலைவர் வெளிநாட்டவர் ஒருவரைக் கொலை செய்தார். நாட்டுக்கு சுற்றுலா வந்த பெண் ஒருவரை பாலியல் துஸ்பிரயோகம் செய்ய முயற்சிக்கையில் அதை அந்த பெண்ணின் கணவர் தடுத்துள்ளார். அதனால் அந்த வெளிநாட்டவர் கொலை செய்யப்பட்டார். சம்பத் மனம்பேரி, பெகோ சமன் ஆகியோர் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள்.

பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு எந்த நாட்டில் வழங்கப்படுகிறது. அவ்வாறு இருந்தால் குறிப்பிடுங்கள். உலகில் அவ்வாறு எங்கும் இல்லை. பாதாளக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பு இல்லையாயின் நாமல் ராஜபக்ச அச்சமடைய தேவையில்லை. அச்சமில்லை, அச்சமில்லை என்று ஊடகங்களுக்கு குறிப்பிட்டுக்கொண்டு திரிகிறார்.

ஒருசிலரது தொலைபேசியில் 'நாமல் சேர், மகே சேர் ராஜபக்ஷ' என்று உள்ளது. பெகோ சமனின் தொலைபேசியில் உள்ளது இந்த நாமலா அல்லது பிறிதொரு நாமலா, என்பது எமக்கு தெரியாது. ஆகவே அச்சமடைய வேண்டாம்.

கொள்கலன்களை ஐந்து ஆண்டுகளுக்கு எதிர்க்கட்சியினர் தோளில் வைத்துக் கொண்டு திரியவேண்டும். கொள்கலன் விவகாரம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. ஹெலிகொப்டர் அனுப்பி குற்றவாளிகளை நாங்கள் பாதுகாக்கப் போவதில்லை என்று பொதுமக்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா போதைப்பொருளுடன் அகப்பட்டபோது அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஹெலிகொப்டரில் நீர்கொழும்புக்கு வந்து நிமல் லன்சாவை கட்டிப்பிடித்தார். போதைப்பொருள் வர்த்தகத்தை நாங்கள் முடிவுக்கு கொண்டு வருவோம் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# சாபக்கேடு

**என்.சத்திய மூர்த்தி**

உண்மையைச்சொல்லவேண்டுமானால், இன்றையதலைமுறை வடக்கு-கிழக்கு முஸ்லிம் பெருமக்கள் 'நன்றி இல்லாதவர்கள்'! அல்லது, 'நன்றி மறந்தவர்கள்'! கடந்த 1990 அக்டோபர் மாதம் விடுதலை புலிகள் அமைப்பினரால், மொத்த சமுதாயமும் வட மாகாணத்தில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டமைக்கும், அதனை ஒட்டி, குறிப்பாக கிழக்கே அப்பாவி முஸ்லிம் மக்கள் சுட்டு கொல்லப்பட்டமைக்கும் இன்றளவும் எந்தவிதமான எதிர்ப்போ, கருத்தோ தெரிவிக்காதவர்கள். ஏன், வருடாந்தம், தமிழ் மக்களை போல, கொலையுண்ட தங்களது முந்தைய தலைமுறையினருக்கு நினைவேந்தல் நிகழ்வுகளைக்கூட பெரிய அளவில் முன்னெடுக்காதவர்கள்.

மாறாக, தற்போதைய முஸ்லிம் சமுதாயம், உயிர்த்த ஞாயிறு படுகொலை சம்பவங்களில் தங்கள் இனத்தை சேர்ந்த ஸஹ்ரான் வகையாறாக்களின் செயலுக்காக கூனிக் குறுகி வெட்கப்படுபவர்கள். இல்லையென்று சொல்லாமல், சிங்களப் பேரினவாதிகளின் எதிர்பாராத தாக்குதலுக்கு பயந்தே இன்றளவும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ்பவர்கள். முன்னது நடந்து முடிந்தது. பின்னது, நடக்கக்கூடாதது. எந்த சமூகத்தின் மதவாதிகளை கேட்டாலும், 'சபிக்கப்பட்டவர்கள்'.

ஆனால், இலங்கையில் வாழும் தமிழ் முஸ்லிம்கள் மட்டுமல்ல, சிங்களம் பேசும் தென்னிலங்கை முஸ்லிம் மக்களும் சபிக்கப்பட்டவர்களா? தற்போதைய முஸ்லிம் இளைஞர்களின் அரசியல் செயல்பாடுகளை எண்ணி நோக்கும்போது, அவ்வாறுதான் கருதத் தோன்றுகிறது. இருசாராரையும் பொறுத்தவரையில், தங்களது சமூக-அரசியல் தலைமைகள் தங்களது சுய இலாபத்திற்காக சமுதாயத்தையே அடகு வைப்பவர்கள். அதனால், ஒரு 'ஷாக் ட்ரீட்மென்ட்' போல், ஒரு முறையாவது, ஜே.வி.பி. தலைமையிலான ஆளும் கூட்டணிக்கு வாக்களித்து ஆதரவு தெரிவிப்பது தவறே இல்லை என்று நினைப்பவர்கள். அல்லது, அவ்வாறெல்லாம்தான் எண்ணத் தோன்றுகிறது.

அந்த வகையில், கடந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு-கிழக்கு தமிழ் வாக்காளர்கள், அரசு அதிபர் அநுரகுமாரவின் ஆளும் கூட்டணிக்கு வாக்களித்தனர். அதிலும், குறிப்பாக தமிழர்களின் கலாசார தலைநகரான யாழ்பாண மண்ணில் தொடங்கி, வடமாகாணம் முழுமைக்கும், புதியதொரு அரசியல் நெறிக்கு வித்திட்டனர். அடுத்து வந்த உள்ளாட்சி தேர்தல்களில் நிமைமை மாறியது என்ற ஒரே காரணத்திற்காக, எதிர்வரும் மாகாண சபை தேர்தலில், 'வேதாளம்' (!) மீண்டும் முருங்கை மரம் ஏறாது என்பதல்ல பொருள்.

அதிலும் குறிப்பாக, தற்போதைய இடைப்பட்ட காலத்தில்கூட தமிழ் அரசியல் தலைமைகள் தங்களது ஒற்றுமை குறித்த பாடங்களைப் படிக்கவில்லை எனும்போது, அந்த அப்பாவி வாக்காளர்களும் என்னதான் செய்வார்கள்?! ஒன்றில், அவர்கள், தங்களது அரசியல் தலைமைகளை அடியோடு மறந்து, மறுத்து, தலைமுழுகவேண்டும். அல்லது, இதுவே தங்கள் விதி என்று நொந்து நூலாகவேண்டும். இவை இரண்டுமே இல்லாமல், பெருவாரி தமிழ் மக்கள், எதிர்காலத்தில் தேர்தல்களை புறக்கணிக்கவும் செய்யலாம்.

## ஈகோ-விற்கு முன்னால்

இவ்வளவு, விலாவரியாக தமிழ் அரசியலை குறித்து மீண்டும் மீண்டும் பேசுவதற்குக் காரணம், அதே பாதையில் தமிழ் பேசும் முஸ்லிம் சமூகத்தினரின் அரசியலும் பயணிப்பதுதான். குறிப்பாக, ரவுப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ரிஷாட் பதியுதீனின் இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து சமுதாயம் சார்ந்த அரசியல் கட்சிகளுக்கும் இடையே எந்த மாதிரியான கொள்கை வேறுபாடுகள் உள்ளன? இன்னும் சொல்லப்போனால், தற்போதைய ஆட்சியாளர்களை ஒழித்து, சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ் மக்களின் எந்தக் கட்சிகளுக்குள்தான் கொள்கை வேறுபாடுகள் உள்ளன?

இல்லையென்று சொல்லாமல், தமிழர் அரசியல் தலைமைகளிடையே, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மட்டுமே, தான் பிடித்தத முயலுக்கு மூன்று கால் என்று ஒற்றை காலில் நிற்பவர். ஆனால், அவரும்கூட தனது ஈகோ காரணமாகவேதான் இவ்வாறெல்லாம் கூறுகிறார் என்று நினைப்பவர்களும் உள்ளனர். அதில் சிலராவது, அவரது ஈகோ, தனது பொன்னம்பலம் குடும்பத்தினரின் அரசியல் பாரம்பரியம் குறித்தது மட்டுமே என்றும் கருதுபவர்கள். அந்த வகையில், கஜேந்திரகுமாரைப் போலவே ஈகோ பார்ப்பவர்கள் தானே மற்ற தமிழ் தலைவர்களும்!

இதில் தமிழர்களுக்கும் தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் இதுதான். முன்னவர்கள், இந்த நாட்டில் தங்களை விட்டால் யாரும் இல்லை என்ற மமதையிலேயே வளர்ந்தவர்கள். போதாதற்கு, அகதிகளாக இந்தியாவில், தமிழ் நாடு சென்று, அங்குள்ள தமிழ் மக்களிடம் எல்லாம் தங்களது மமதையைக் காட்டிக் கொண்டவர்கள். அது, அந்நாட்டு அரசுகள் நடத்தும் அகதி முகாம்களில் ஆகட்டும், அல்லது சொந்த காசில் நகர்புறங்களில் வீடு வாடகைக்கு எடுத்து குடிபெயர்ந்தவர்கள் ஆகட்டும், எல்லோருமே ஒரே ரகம்தான்.

இதில் சொந்த காசில் சூனியம் வைத்துக் கொண்டவர்கள், மேலை நாடுகளில் பணி செய்யும் தங்களது பிள்ளைகளை அண்டி வாழ்ந்தவர்கள். ஆனாலும் அவர்கள் அங்கு அடித்த பந்தா சொல்லி மாளாது. இன்னும் சொல்லப்போனால், ராஜீவ் காந்தி படுகொலைக்கு முன்னர், இங்கிருந்து சென்ற தமிழர்களுக்கும், அங்கேயே நூற்றாண்டு காலங்களாக வாழ்ந்து வந்த மக்களுக்கும் இடையே முறுகல் போக்கு தொடர் கதையாக இருந்தது. ராஜீவ் படுகொலை கொடுத்த பயத்தினால், இலங்கை தமிழ் மக்கள் பெட்டிபாம்பாய் அடங்கி வாழ வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டார்கள்.

## பகல் கொள்ளை

ஆனால், இங்குள்ள முஸ்லிம் மக்களின் நிலமை அவ்வாறல்ல. தாங்கள் சகோதர பாசத்துடன் வளர்ந்த தமிழ் மக்களுக்கு தலைமைத்துவம் நல்கிய விடுதலை புலிகள் அமைப்பு தங்கள் மீது பாயும் என்று அவர்கள் ஒரு நாளும் கனவுகூடக் கண்டிருக்க மாட்டார்கள். பெருவாரியாக வியாபாரிகளாகத் தலைமுறை தலைமுறையாக தொடர்ந்த அவர்களுக்கு, தாங்கள் பிறந்து வளர்ந்த தமிழ் மொழி தவிர சிங்களமும் தெரிந்திருந்தது சாபக்கேடாக மாறியது.

சிங்களவர்களை பொறுத்தவரையில், முஸ்லிம் மக்களும்கூட தமிழர்களே. ஆனால், தமிழர்கள், குறிப்பாக விடுதலை புலிகள் அமைப்பினருக்கு, சிங்களம் அறிந்த முஸ்லிம் மக்கள் அரசின் கூலிபடையினராக மட்டுமே தெரிந்தனர். அந்த சந்தேகம் முற்றி முற்றிதான், கிழக்கில் அந்த மக்கள் மீதான கொலை தாக்குதலும், வடக்கில், ஒவ்வொரு ஊரில் இருந்தும் அவர்கள் விரட்டி அடிக்கப்பட்டதும்.

அன்று, முஸ்லிம் மக்களின் வீடு, கடைகள், மற்றும் நில-புலன்கள் என்று விடுதலை புலிகள் அமைப்பால், அடையாளம் காணப்பட்ட இடங்கள் எல்லாம் இப்போது யாருடைய கைகளில் என்பது யாருக்கு வெளிச்சம்? அதேசமயம், குறிப்பாக யாழ்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களிடமிருந்து, கைப்பற்றபட்ட அதிக தொகையிலான பணம் மற்றும் தங்க நகைகள் எல்லாம் யாரிடம் போயிற்று?

கடைசிப் போரின் பின்னர், தமிழ் மக்களின் தங்க-வெள்ளிநகைகளைபலகொதிகலன்களில்அரசு தரப்பு திருடி சென்றது என்று கூக்குரலிட்டோர், ஏன், இதுபற்றிஎல்லாம்கதைப்பதுஇல்லை? அதற்காகஅரசு செய்ததாக கூறப்பட்ட திருட்டு குற்றம் ருசுவானால் நியாயப்படுத்த முடியாது. அதற்காக, விடுதலை புலிகள் அமைப்பின் பகல் கொள்ளையையும் இன்றளவும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

இதில் கொடுமையே, அன்று விடுதலை புலிகள் அமைப்பால் வலுக்கட்டாயமாக பிடித்து பறிக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் பணம் மற்றும் நகைகள் குறித்து அந்த சமூகத்தினரே வாய் திறந்தது இல்லை. இன்று, விடுதலை புலிகள் அமைப்பின் மீது பயம் கொள்ள காரணம் இல்லாத போதும். எந்தவொரு முஸ்லிம் சமூக-அரசியல் தலைவரும் நாடாளுமன்றத்திலோ, அல்லது வெளியிலோ மறந்து போய்க்கூட சமுதாயம் சார்ந்த விடயங்களை பேசுவதில்லை.

## சொற்போர்

இதில், கொடுமையே, இன்றளவும், தமிழ் முஸ்லிம்சமுதாயம்மற்றும்அரசியல்தலைமைகள் அரசுடன் இணைந்தே செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக, உயிர்த்த ஞாயிறு தீவிரவாத தாக்குதலுக்குப் பின்னர் அரங்கேறிய சொற்போர்களின் இடையே, ஸஹ்ரான் வகையறா குறித்தெல்லாம் அரசு தலைமைகளிடம் தொடர்ந்து தெரிவித்து வந்ததாக, முஸ்லிம் சமூக மற்றும் அரசியல் தலைமைகள் அறிவித்தன. அவற்றை இன்றளவும் எந்தவொரு அரசு தரப்பும் மறுத்ததில்லை.

அதேசமயம், அதிபர் மைத்திரிபால சிறிசேனாவிடம் இது குறித்தெல்லாம் முன்னமே அறிவித்திருந்தோம் என்று முஸ்லிம் தரப்பு கூறியதோ, அதே முஸ்லிம் தரப்பைதான் சிறிசேனா அரசு 'வைத்து செய்தது'. எந்தவித காரண-காரியங்களும் இல்லாமல், பொதுவெளியில் முஸ்லிம் மகளிர் 'பர்தா' அணிந்து செல்வதை அரசு தடை செய்தது.

உண்மை என்னவோ, அண்மை காலம் வரை, பர்தா, இந்த நாட்டிலுள்ள முஸ்லிம் மகளிர் அணிந்து வந்த ஆடை அல்ல. மாறாக, மேற்காசிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கலாசாரம். அதுவும் குறிப்பாக, இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் இங்கு கொண்டுவரப்பட்டு, பெண்கள் அணிவதற்கு கட்டாயப்படுத்தப்பட்ட ஒரு விடயம். அந்த விதத்தில், அரசின் முடிவு அதிகப்படியான முஸ்லிம் இனத்தவரை பாதிக்கவில்லை என்றாலும், மத உரிமை விடயத்தில், இந்தப் பிரச்சினையை அரசு அணுகி, மதத்தலைவர்கள் மூலம் ஒரு முடிவை ஏற்படுத்தி இருக்கலாம்.

## பேரினவாத அரசியல்

இது இப்படி என்றால், கோவிட் பெருந்தொற்று காலகட்டத்தில், இந்த நாட்டின் முஸ்லிம் மக்கள் தங்களது இறந்துபட்ட குடும்பத்தவரின் உடல்களை புதைகக்கூடாது என்று அப்போதைய கோத்தபாய ராஜபக்சா அரசு ஒருதலைபட்சமாக முடிவெடுத்து செயல்படுத்தியது. ஒன்றில் அந்த உடல்கள் எரியூட்டப்படவேண்டும். அல்லது, அவ்வாறு இறந்தவர்களின் உடல்களைப் புதைக்கும் வழக்கத்தை தொடரும் மாலைத்தீவு போன்ற நாடுகளுக்கு எடுத்து செல்லவேண்டும் என்று தெரிவித்தது.

அந்த விதத்தில், மாலத்தீவு உள்ளிட்ட அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் பெருந்தொற்றுக் காலத்தில் இறந்தவர்களை புதைக்கவே செய்தார்கள். ஏன், ஐ.நா.வின் உலக சுகாதார நிறுவனமும் பெருந்தொற்றில் இறந்தவர்களை புதைப்பதால் அந்த நோய் பரவும் என்று கூறவில்லை. மாறாக, அவ்வாறு நடக்காது என்றே உறுதி அளித்தன.

இவை எல்லாம், முஸ்லிம் சமுதாயத்திற்கு எதிரேயான பேரினவாத அரசியலின் ஒரு பகுதியே. அதில் உச்சக்கட்டம், இனப்போர் முடிந்த பின்னர் அரங்கேறிய 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது வெளிப்பட்டது. அந்தக் கணக்கெடுபபின் முழு விவரங்களும் இன்றுவரை வெளியிடப்பட்டதாக தகவல் இல்லை.

அப்போது அரசல்புரசலாக காதில் விழுந்த செய்தி இதுதான். அப்போதைய மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, சிங்கள-பௌத்த இனத்தவர்களுக்கு பின்னர், முஸ்லிம் இனத்தவரே நாட்டின் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான இனம். அது ஆட்சியாளர்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். வெளியிடப்பட்ட தகவல்களின்படி, இரண்டாவது இடத்தை இலங்கை தமிழ் சமூகம் தொடர்ந்து கைப்பற்றி இருந்தது.

அடுத்தடுத்து ஆயிரகணக்கில், போரில் தங்களது இரு பால் தலைமுறையினரை இழந்த பிறகு, அது தவிர அவர்களில் பலரும் கனகாலமாக மேலை நாடுகளில் தஞ்சம் அடைந்த பிறகு, இது என்ன கூத்து, என்று கேட்டவர்கள் உண்டு. ஆனால், மற்ற எந்த விதத்திலும், மக்கள் தொகை குறையாத மலையகத் தமிழ் மக்களின் எண்ணிக்கை மட்டும் தடாலடியாக எப்படி குறைந்தது?

அதற்கான விடை இதுவரை இல்லை. ஏன், அந்தச் சமுதாயத்தின் தலைவர்களே இந்தக் கேள்வியைக்கூட இதுவரை கேட்டதில்லை.

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# உலக மயமாக்கலும் தமிழர் பண்பாடும்



தரணி போற்றும் தமிழர் பண்பாடு என்பது உலகளவில் போற்றப்படும் ஒரு சிறப்பு மிக்க பண்பாடு ஆகும். தமிழர்களின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், விழுமியங்கள், கலைகள் மற்றும் மொழியின் மூலம் வெளிப்படும் பண்பாட்டுக்கூறுகள் இந்தப் பண்பாட்டைக் குறிக்கின்றன. மேலும் தமிழர் பண்பாடு என்பது தமிழர்களின் பாரம்பரியம், வரலாறு, விழுமியங்கள் மற்றும் கலைகள் ஆகியவற்றின் தொகுப்பாகும். மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் தங்களது வாழ்வுக்கும் இலக்கணம் வகுத்தே வாழ்ந்து வந்துள்ளனர்.

இந்த வகையில் உலகின் முதன்மையானதும், சிறந்ததாகவும் தமிழர்களின் பண்பாடு காணப்படுகின்றது. எம்முடைய முன்னோர்கள் சிறந்த கலாசாரத்தையும், பண்பாட்டுப் பழக்க வழக்கங்களையும் பின்பற்றி ஆரோக்கியமான ஒழுக்க நெறிமுறைகளோடான வாழ்வையே வாழ்ந்துள்ளனர். தமிழர்களின் முக்கியமான அடையாளங்களில் ஒன்றாக அவர்களுடைய பண்பாடு விளங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுவாகவே மக்களுடைய செயற்பாட்டுக் கோலங்களையும் அத்தகைய செயற்பாடுகளுக்கு முக்கியத்துவத்தையும், சிறப்பு தன்மையும் வழுங்கக்கூடிய குறியீட்டு அமைப்பையே பண்பாடு என நாம் வரையறை செய்கின்றோம். தமிழர்கள் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தங்களுடைய பண்பாடுகளில் சிறந்து விளங்கியுள்ளனர் என்பதனை சங்ககால இலக்கியங்கள் எமக்கு மிகவும் தெளிவாக உணர்த்துகின்றன. இவ்வாறான தொன்மையான வரலாறு கொண்ட தமிழர்கள் பண்பாடு பற்றி இக்கட்டுரையில் நோக்கலாம்.

'அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்' என்ற குறளின் மூலமாக திருவள்ளுவர் அறத்தின் வழி மாறுதலே தமிழர்களின் பண்பாடு என்பதனை சுட்டிக்காட்டுகின்றனர். மேலும் கனியன் பூங்குன்றனார் பாடிய 'யாதும் ஊரே யாவரும் கேளிர்! தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்ற பாடலின் வழியும் தமிழர்களின் பண்பாடு உணர்த்தப்படுகின்றது. அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற விடயங்களை பின்பற்றி வாழ்வதே வாழ்க்கை என்பது தமிழர்களின் பண்பாடாகும். உறவினர்களை உபசரித்தல் மற்றும் வரவேற்றல், இன்சொல் பேசுதல், உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், நன்றி மறவாமை, பெண்கள் முதியோர்களை மதித்தல் மற்றும் சிறுவர்களிடத்தில் அன்பு காட்டுதல் போன்றன தமிழர்களின் பண்பாட்டு அம்சங்களாக விளங்குகின்றன.

தமிழர் பண்பாட்டின் சிறப்புக்களாக மொழி:- தமிழ்மொழி உலகின் மிகப்பழமையான மொழிகளில் ஒன்று. தமிழர் பண்பாட்டின் முக்கிய அம்சமாகும். இது இலக்கியம், இலக்கணம், கவிதைகள் மற்றும் பல்வேறு எழுத்து வடிவங்களில் வெளிப்படுகின்றது. குடும்ப அமைப்பு:- கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை, மூத்தோரைப் பேணல், உறவுகளை மதித்தல் போன்ற பண்புகள் தமிழ்களின் குடும்ப அமைப்பில் முக்கியத்துவம் பெறுகின்றன. விழாக்களும் கொண்டாட்டங்களும்:- தமிழர் திருவிழாக்கள், இல்ல நிகழ்ச்சிகள், உறவினர்களுடன் கூடி மகிழ்வது போன்ற விழாக்கள் தமிழர் பண்பாட்டின் ஒரு பகுதியாகும். கலைகள்:- தமிழர் கலைகளான பரதநாட்டியம், கூத்து, இசை, சிற்பம், ஓவியம் போன்ற கலைகள் தமிழர் பண்பாட்டின் வெளிப்பாடாகும். இவற்றிற்கு மேலாக தரணி போற்றும் பண்புகளாக

அறம் மற்றும் நீதி:- தமிழர் பண்பாடு அறம் மற்றும் நீதிக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. இது நல்லொழுக்கம், நேர்மை மற்றும் சமூக நலனை வலியுறுத்துகின்றது. விருந்தோம்பல்:- தமிழர்கள் விருந்தினர்களை உபசரிப்பதில் சிறந்து விளங்குகின்றனர். விருந்தோம்பல் பண்பு தமிழர் பண்பாட்டின் முக்கிய அங்கமாகும். கற்றல் மற்றும் அறிவு:- தமிழர் பண்பாட்டில் தமிழர்கள் கல்விக்கும், அறிவை வளர்ப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கிறார்கள். தமிழர் பண்பாட்டில் எதிர்நோக்கும் சவால்களாக நாம் வாழக்கூடிய புதிய தொழில்நுட்ப யுகத்தில் தொன்மையான எம்முடைய பண்பாட்டை அவ்வாறே பின்பற்றுவதில் பல்வேறு சவால்கள் எழுந்தவண்ணமே உள்ளன. இந்தவகையில் நோக்கும்போது இன்றைய உலகமயமாக்கல், மேலைநாட்டு கலாச்சார ஊடுருவல், தொடர்பாடல் வளர்ச்சி, நீண்ட பயணங்களின் தோற்றம் போன்ற பல்வேறு அம்சங்கள் தமிழர் பண்பாட்டில் சவால்களையும், மாற்றங்களையும் ஏற்படுத்துகின்றன. அதன் அடிப்படையில் தமிழர்களின் ஆடை அணிகலன்கள், வைத்தியமுறை, உணவு முறை, விருந்தோம்பல் போன்ற அனைத்திலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை தமிழர் பண்பாடுகளுக்கு சவாலாகவே காணப்படுகின்றன.

உலகமயமாக்கல் வருவதற்கு முன்பே ஓரளவு பண்பாட்டுச் சீர்கேடு இருந்ததுண்டு. அது வந்தபின் பண்பாட்டுச் சீர்கேடு தற்போது அதிகம் காணப்படுகின்றது. அதற்கு ஓர் எடுத்துக்காட்டு அலைபேசி மூலம் பல பாலியல் குற்றங்கள் அரங்கேறுவது. மிகவும் மோசமாக பலரது வாழ்வு இதனால் பாழாகிக் கொண்டு வருகின்றது. இதில் ஓரளவு ஆறுதல் அளிக்கக்கூடிய உண்மை, ஒரு குறிப்பிட்ட இளம் பருவத்தைக் கடந்ததுமே பண்பாட்டின் அருமையை பாதை மாறுவோரும் உணர்ந்து கொண்டு திருந்துவதுதான். இருப்பினும் நம் கல்வித் திட்டத்தைச் செம்மையாக்குவதன் மூலமும் காவல்துறையினர் கடுமையான சட்டங்களின் மூலமும், முக்கியமாக பெற்றோர்கள் தம் அன்பார்ந்த வழிகாட்டல் மூலமாகவும் நம் இளைய தலைமுறையையும், பண்பாட்டையும் காக்க வேண்டிய சூழல் இப்போது உள்ளது.

உலகில் தோன்றிய எத்தனையோ பண்பாடுகள் காலத்தால் அழிந்துபோய் உள்ளனவாக காணப்படுகின்றன. ஆனால் தமிழர் பண்பாடானது தொன்மையான ஒன்றாகவும், தற்கால வரை பின்பற்றப்பட்டு வரக்கூடிய ஒன்றாகவும் காணப்படுகின்றது. இருந்த போதிலும் தற்காலங்களில் நாகரீக வளர்ச்சி, பிற மொழிக் கலப்பு, மேற்கத்தய கலாசார ஊடுருவல் போன்ற காரணங்களினால் அழிந்து கொண்டு வருவதனைக் காணலாம். தற்காலங்களில் அதிகமாக தமிழ் மக்களிடையே தமிழ்மொழி பற்று மறைந்து ஆங்கில மொழி மீதான மோகமே அதிகரித்துள்ளது. அத்தோடு பிற கலாச்சார தாங்கங்களாலும் தமிழர் பண்பாட்டு, தமிழர் ஆடையமைப்பு, உபசரிப்பு போன்ற பண்பாட்டு அம்சங்களிலும் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டே வருகின்றன.

உலகின் தொன்மையான பண்பாடுகளில் ஒன்றான தமிழர்களின் பண்பாடுகளை அழிந்து போக விடாமல் முழுமையாகப் பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு கடத்த வேண்டியது இளைய சந்ததியினர்களது தலையாய கடமையாகும். இளைய சந்ததியினர் எமது முன்னோர்கள் பின்பற்றி பாதுகாத்து வந்த பண்டிகைகள், விழாக்கள், பாரம்பரிய நிகழ்வுகள் போன்றவற்றை கொண்டாடுவதோடு, விருந்தோம்பல், உணவு பழக்கவழக்கம், ஆடை அமைப்பு போன்றவற்றினையும் பின்பற்றி அடுத்த சந்ததியினருக்கு முறையாக கற்றுக் கொடுப்பதுவும் இளைய சந்ததியினர்களது கடமையாகவே காணப்படுகின்றது.

தற்போதைய நவீன யுகமானது தமிழர்களினுடைய பெருமையும், பண்பாடும் குறைந்து கொண்டு வரக்கூடிய ஒரு கலிகாலமாகவே காணப்படுகின்றது. ஆகவே உலகுக்கே பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் சொல்லிக் கொடுத்த தமிழர்களின் பண்பாடும், பெருமைகளும் எப்பொழுதும் மறைந்து விடக்கூடாது. எம்முடைய தமிழர், பண்பாட்டின் ஆழத்தை தற்கால சந்ததியினருக்கு சொல்லிக் கொடுப்பதோடு அதனை கற்றுக் கொள்வதும் உரிய முறையில் எதிர்கால சந்ததிகளுக்கும் கடத்துவதும் எம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். ஆகவே நாம் அனைவரும் தமிழர் பண்பாட்டை பேணி பாதுகாக்கவேண்டும்.

**மதுரங்கா**


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722




Mon-Sat Hp World - 077 359 4363 | Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.10.2025இல் வெளியிடப்பெற்றது